முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S No. 1336/2024**

**Witness PW 1**

பெயர்: விஜயலட்சுமி

த/பெ.:

இன்று (27/03/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வீரகவுண்டரின் வாரிசுகள் தங்கவேல், கோவிந்தன், ஆறுமுகம், ராமசந்திரன் ஆகியோர் வாய்மொழி பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்று சொல்லியுள்ளேன் அது குறித்துஎனக்கு நேரடியாக தெரியாது, என் அப்பா சொல்லித்தெரியும். அந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் யார் யாருக்கு எந்த எந்த சொத்துகள் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். பாகப்பிரிவினை செய்த காலத்தில் மொத்த சொத்தாக எவ்வளவு இருந்தது என்றால் அதுப்பற்றி தெரியவில்லை. கொள்ளை காட்டில் என் தந்தை பெயருக்கு 80 செண்ட் சொத்து புஞ்சையாக இருந்தது, 50 செண்ட் நஞ்சையாக இருந்தது, 10 செண்ட் வீட்டு மனையாக இருந்தது. வழக்குரை சி பட்டியலில் 4வது இன சொத்தாக மேற்படி 10 செண்ட் வீட்டு மனையை காட்டியுள்ளேன். வாய்மொழிப் பாகப்பிரிவினையில் புஞ்சை 80 செண்ட் வீரகவுண்டரின் 4 மகன்களுக்கும் தலா எவ்வளவு விஸ்தீரணம் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியவில்லை. அவ்வாறு நஞ்சை சொத்திலும் தலா எவ்வளவு விஸ்தீரணம் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. சி பட்டியல் 4வது அயிட்ட வீடு எனது தந்தை பாகத்தில் உள்ளது. மற்ற மூன்று வீரகவுண்டரின் வாரிசுகளுக்கு வீடு பொறுத்து சொத்துகள் எவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியவில்லை. அமிர்தம்மாள் என்பவர் ராமசந்திரன் மனைவி ஆகும். அமிர்தம்மாளுக்கு தங்கவேலு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார். அவ்வாறு புல எண்.148/8பி -ல் 73 செண்ட் தங்கவேல் அமிர்தம்மாள் பெயரில் வா.சா.ஆ.1 வாயிலாக கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி 73 செண்டில் இருந்து 65 செண்ட் சொத்தை அமிர்தம்மாள் தனது மருமகள் சந்திரா பெயரில் தான செட்டில்மெண்ட் ஆவணமான வா.சா.ஆ.2 -ஐ எழுதிக்கொடுத்துள்ளார். இது தவிர்த்து மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் 27 1/4 செண்ட் சொத்து எழுதப்பட்டுள்ளது. எனக்கு படிக்க தெரியும். வா.சா.ஆ.2 -ஐ படித்துள்ளேன். அதில் நான் மேலே சொன்ன புல எண்களான 148/8பி இடம் பெறவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த போது மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் புல எண் 148/8பி

குறிப்பிடப்படவில்லை, தவறாக புல எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ல் உள்ள சர்வே எண்.125/10 ஏற்கனவே குடும்ப சொத்தாக இருந்து விற்கப்பட்டுவிட்டது, அது தவறாக வா.சா.ஆ.2ல் இடம் பெற்றுவிட்டது. ஆவணம் எழுதிக்கொடுத்த ஆறுமுகம், அமிர்தம்மாள் மற்றும் ஆவணம் எழுதி வாங்கிய சந்திரா ஆகியோர் மேலே சொன்ன புல எண் தவறாகிவிட்டது என்று பிழை திருத்தல் பத்திரம் எதுவும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. சந்திரா 1982ம் ஆண்டு இறந்துவிட்டார். சந்திரா உயிருடன் இருந்த காலம் வரை புல எண்.148/8பி தொடர்பாக சந்திரா பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். செட்டில்மெண்டிற்கும் பிறகும் மேற்படி சொத்தை குடும்ப சொத்தாக தான் அனுபவம் செய்து வந்தோம். மேற்படி செட்டில்மெண்ட் சொத்து எனது தனிப்பட்ட சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிராதில் இந்த சொத்து பொது குடும்ப சொத்து என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது தாயார் சந்திரா இறக்கும் போது எனக்கு 3 வயது ஆகும். எனது உடன் பிறந்த சகோதரி விஜயகுமாரி ஆகும். விஜயகுமாரி 8 மாத குழந்தையாக இருக்கும் போதே இறந்துவிட்டார். எனது தாயார் இறந்த பிறகு 4ம் பிரதிவாதி ராஜேஸ்வரியை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். ராஜேஸ்வரியின் பிள்ளைகள் தான் ஏழுமலை மற்றும் சிவலிங்கம் ஆகிய 2, 3 எதிர்வாதிகளும், இன்னொரு மணி என்பவரும் என்றால் சரிதான். மணி திருமணம் ஆகாமலும், வாரிசு இன்றியும் இறந்துவிட்டார். வா.சா.ஆ.2ல் கண்டுள்ள சொத்துகள் பொறுத்து நான் பெரும்பான்மை வயதை அடைந்த பிறகும் என் பெயரில் அதன் அனுபவத்தை காட்டும் ஆவணமாக வரி ரசீதுகள், பட்டாக்கள், சாகுபடி அடங்கல் போன்றவை ஏற்படவில்லை என்றால் சரிதான். இந்த சொத்துகளை நாங்கள் பொது குடும்ப சொத்தாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். வழக்கில் இந்த சொத்துகள் பி பட்டியல் சொத்தாக காட்டப்பட்டுள்ளது. சி பட்டியல் சொத்தான 3 அயிட்ட நிலங்களும், 1 அயிட்ட வீடு மனையும் என்னுடைய தாத்தா ராமசந்திரனுக்கு வாய்மொழி பாகப்பிரிவினையில் அவரின் பங்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்துகளை பொறுத்து ராமசந்திரன் எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்கவில்லை. இறந்துபோன ராமசந்திரனுக்கு முதல் பிரதிவாதி வீரப்ப கவுண்டர் மகனாகும். ஆண்டாள் என்பவர் மகளாகும். ஆண்டாளை திருவெண்ணெய்நல்லூர் வட்டம் சாராயமேடு ஊரில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். மேற்படி ஆண்டாளை இந்த வழக்கில் நான் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ராமசந்திரனின் மேற்படி சொத்தில் வீரப்ப கவுண்டருக்கு பாதிபாகம், ஆண்டாளுக்கு பாதி பாகம் உரிமையுடையது என்றால் சரிதான். ஆண்டாள் தனக்கு பாக சொத்து வேண்டாம் என்று எனது தந்தை பெயருக்கு ஆவணங்கள் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. சி பட்டியல் சொத்தை தாத்தா இறந்தபிறகு

எனது தந்தை ராமச்சந்திரன் தான் அனுபவம் செய்து வந்தார். ராமசந்திரன் கடந்த 15/03/2016ம் தேதி ஏழுமலை மற்றும் சிவலிங்கம் பெயரில் வா.சா.ஆ.9 தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார். அந்த ஆவணத்தின் அடிப்படையில் ஏழுமலையும், சிவலிங்கமும் மேற்படி ஆவண சொத்துகளுக்கான பட்டா மற்றும் வரி ரசீதுகள் போன்றவற்றை தங்கள் பெயரில் மாற்றி கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் சொத்துகளை சிவலிங்கமும், ஏழுமலையும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் தாயாரின் திருமணத்திற்கு வேண்டி பெரியசெவலை ராஜகோபால் என்பவருக்கு புஞ்சையில் அரைகாணி நிலமும், மேலே சொன்ன புல எண்.125/10ல் 30 செண்ட் 1ம் பிரதிவாதி விற்பனை செய்துவிட்டார் என்றால் அது திருமணத்தின் போது அல்ல, அதற்கு முன்பே விற்கப்பட்டுவிட்டது. எனது தாயாருக்கு 1978ல் திருமணம் நடந்தது. தேதி, மாதம் நியாபகம் இல்லை. எனக்கும், 2ம் பிரதிவாதி ஏழுமலைக்கும் என் அப்பா இருக்கும் போது 08/09/1992 தேதியில் பத்திரிக்கை அச்சிட்டு காது குத்தினார்கள் என்றால் சரிதான். எங்கள் குல தெய்வம் தீப்பாஞ்சாலி கோவிலில் வைத்து நடைபெற்றிருந்தால் சரிதான். நான வயதுக்கு வந்த போது என் தந்தையார் பத்திரிக்கைஅடித்து கடந்த 07/04/1995 அன்று விழா நடத்தினார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் 25/08/1999 அன்று நடைப்பெற்றது. எனது திருமணம் கடலூர் மெயின் ரோடு, குரு திருமண மண்டபத்தில் பத்திரிக்கை அச்சிட்டு நடைப்பெற்றது என்றால் சரிதான். திருமணத்திற்கான துணிமணிகள் பாண்டிச்சேரி உறிச்சந்திரா டெக்ஸ்டைல்ஸில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். வீட்டிற்கு தேவையான சீர்வரிசை, பாத்திரங்கள் விழுப்புரம் கற்பக விலாஸ் கடையில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். எனது திருமணத்தின் போது எனது தந்தை 20 செண்ட் சொத்தை பெரியசெவலை நல்லிரசன் என்பவருக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.11 சட்ட பதில் அறிவிப்பில் பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி திருமணத்தின் போது நல்லிரசன் என்பவர் பெயருக்கு எனது தந்தையார் சொத்து கிரையம் கொடுக்கப்பட்டது என சொல்லப்பட்டிருந்த போதிலும் அதுப்பற்றி பிராதில் என்னால் மறுக்கப்படவில்லை என்றால் அதுப்பற்றி தெரியவில்லை. எனது தந்தையார் எனக்கு நகை எதுவும் திருமணத்தின் போது போடவில்லை. வா.சா.ஆ.11ல் எனது தந்தை 25 பவுன் நகை போட்டதாக சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியும். இந்த சங்கதி குறித்து நான் பிராதில் மறுக்கவில்லை என்றால் வக்கீலிடம் சொல்லியுள்ளேன். எனது தந்தையார் நான் பிறந்ததிலிருந்து அவரின் மகளாக என்னை காது குத்து முதல் திருமணம் வரை விழாக்கள் நடத்தி சிறப்பாக வளர்த்துள்ளார் என்றாலும், வழக்கிற்காக இவை இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. திருமணத்திற்கு பிறகும் எனது தந்தையார் உயிருடன் இருந்த வரை எனக்கு செய்ய வேண்டிய

சீர்வரிசைகள் அனைத்தையும் முறையாக செய்து வந்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பாக வழக்கு அந்த சொத்துகளில் உரிமையுடைய எனது அத்தை ஆண்டாளை சேர்க்காததால் வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காமல் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும், இந்த ஒரு காரணத்திற்காகவே வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்றாலும் சரியல்ல. பி பட்டியல் சொத்து குறித்து வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் ஆவணம் நடப்பிற்கு வராத நிலையில் இந்த இன சொத்துகள் பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்க இயலாது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2ற்கு பிறகும் வழக்கு பி அட்டவணை சொத்து பொது குடும்ப சொத்துகளாக அனுபவம் செய்து வருவதாக சொல்லும் நிலையில் சொத்துகளுக்கு விளம்புகை பரிகாரம் கேட்க இயலாது என்றாலும் சரியல்ல. எனவே நான் கேட்டுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்பதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**(Sd/-C.R.Gowthaman)**
**Principal Subordinate Judge,**
**Villupuram.**